<u>**வாக்குமூலம்**</u>

<u>**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**</u>

<u>**வழக்கு எண் : SC.No. 169/2024**</u>

<u>**வழக்கு சாட்சி PW-4**</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கருணாகரன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of April 22nd , 2025.

**(எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>**முதல் விசாரணை :**</u>

நான் பாம்புக்கோவில்சந்தையில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். பட்டியல் சாட்சி 1 வள்ளியம்மாள் எனது மாமியார். அ.சா.1 எனது மனைவி. எதிரிகளை எனக்கு தெரியும். எனது மாமியார் வள்ளியம்மாள் எங்கள் ஊர் ரகுமானியா தெருவில் குடியிருந்து வருகிறார். எனது மாமனார் பெயர் தங்கவேல். அவர் 30 வருடங்களுக்கு முன்பு இறந்து விட்டார். அவர்களுக்கு சந்திரா, இராஜேஸ்வரி என்ற பெண் பிள்ளைகளும், முனீஸ்வரன் என்ற மகனும் உண்டு. எனது மைத்துனர் முனீஸ்வரன் சுமார் 10 வருடங்களுக்கு முன்பு கிட்னி பாதிப்பு ஏற்பட்டு, இறந்து விட்டார். அவருக்கு சந்திரா கிட்னி தானம் செய்திருந்தார். சந்திராவுக்கு வீடு இல்லாமல் கஷ்டப்பட்டு கொண்டு இருந்தார். எனது மனைவி இராஜேஸ்வரிக்கு திருமணத்தின் போது,

சீர்வரிசை எதுவும் கொடுக்கவில்லை என்ற காரணத்தினால் எனது மாமியார் வள்ளியம்மாள் ஊருக்கு தெற்கேயுள்ள புன்செய் நிலத்தில் 35 சென்ட் நிலத்தை இருவருக்கும் பொதுவாக எழுதி வைத்தார். இது எதிரிகளுக்கு பிடிக்கவில்லை. இதனால், பொது இடங்களில் எங்களைப் பார்த்து திட்டி வந்ததார்கள். நாங்கள் அதை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. எதிரி பாப்பா என்ற வெள்ளத்தாய் எங்க ஊர் வெள்ளச்சாமியின் மனைவி தங்கம்மாளிடம் "அவர்களை நாங்க சும்மா விட மாட்டோம்" என்று கூறியுள்ளார். 29.05.2018ம் தேதி, சாயுங்காலம் 05.00 மணியளவில் எனது மாமியார் வீட்டின் முன்பு மறைக்காயர் வீட்டு வாசல் அருகே எனது மனைவி இராஜேஸ்வரி ஒரு வயது குழந்தை செந்திலை கையில் வைத்து கொண்டு அவரது தாயாரிடம் பேசிக்கொண்டிருந்தபோது, எதிரி சிவக்குமார் அங்கு வந்து "ஏ தேவடியா முண்ட, என் அப்பாவுக்கு சேர வேண்டிய சொத்தை நீ இருந்தால் தானே எழுதிக்கொடுப்பே" என்று அசிங்கமாக பேசியபோது, எனது மனைவி "ஏன் இப்படி கெட்ட வார்த்தை பேசுகிறாய்" என்று கேட்டார். உடனே எதிரி இடுப்பில் இருந்த அரிவாளை எடுத்து "இத்தோடு செத்து தொலை" என்று சொல்லி எனது மனைவியின் கழுத்தை நோக்கி வெட்டினார். அதில் அவருக்கு வெட்டுக்காயங்கள் ஏற்பட்டது. இரண்டு கைகளையும் வெட்டி விட்டார். அதில் இரண்டு கைகளும் தொங்கிக்கொண்டு இருந்தது. மருத்துவமனையில் சேர்த்தும் கைகளை ஒட்ட வைக்க முடியவில்லை. தற்போது என் மனைவிக்கு இரண்டு கைகளும் கிடையாது. எதிரி எனது மனைவியின் வலது முழங்காலையும் வெட்டி காயப்படுத்தினார். தடுக்க வந்த மாமியார் வள்ளியம்மாளுக்கும் இடுப்பில் வெட்டு விழுந்து, காயம் ஏற்பட்டது. காயம்பட்ட இருவரையும் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக

திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் அனுப்பி வைத்தார்கள். நடவடிக்கை எடுக்க எனது மாமியார் புகார் வாக்குமூலம் கொடுத்தார். இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

(எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை மனுவின் பேரில் ஒத்தி வைக்கப்பட்டது.)

C KATHIRAVAN

Digitally signed by C KATHIRAVAN
Date: 2025.04.23 11:58:10 +0530

<u>வாக்குமூலம்</u>

<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>

<u>வழக்கு எண் : SC.No. 169/2024</u>

<u>வழக்கு சாட்சி PW-5</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குருசாமி | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of April 22nd , 2025.

**(எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் பாம்புக்கோவில்சந்தையில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். பட்டியல் சாட்சி 1 வள்ளியம்மாள் எனது பெரியம்மா. அ.சா.1 எனது அக்கா. எதிரிகளை எனக்கு தெரியும். எனது பெரியம்மா வள்ளியம்மாள் அவருக்கு சொந்தமான 35 சென்ட் இடத்தை அவரது மகள்களான இராஜேஸ்வரிக்கும், சந்திராவுக்கும் எழுதிக் கொடுத்ததால் எதிரி சிவகுமார் 29.05.2018 ம் தேதி, சாயுங்காலம் 05.00 மணிக்கு சத்தம் போட்டதால் இராஜேஸ்வரி அவரிடம் பெரிய ஆளை ஏன் இவ்வாறு அவமரியாதையாக பேசுகிறாய் என்று சத்தம் போட்டபோது, "நீ உயிரோடு இருந்தால் தானே, சொத்தை எழுதி வாங்குவாய்" என்று சொல்லி, இடுப்பில் இருந்த அரிவாளை எடுத்து, இராஜேஸ்வரி எனது மகனை கையில் வைத்திருந்த போது, அரிவாளால் இரண்டு கைகளிலும், தொடையிலும் வெட்டினார். எனது பெரியம்மா வள்ளியம்மாளை இடுப்பில்

வெட்டினார். பிறகு அரிவாளை கிழக்கு பக்கமாக வீசிவிட்டு சென்று விட்டார். இந்த சம்பவம் என் வீட்டு முன்பு மறைக்காயர் திண்ணையில் நடந்தது. காயம்பட்ட இருவரையும் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>3 மற்றும் 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>** –

நான் முதல் விசாரணையில் கூறியது போல் தான் போலீஸ் விசாரணையின் போதும் கூறினேன். மாடசாமி, சிவஞானம், வள்ளியம்மாள், போத்தியாச்சி ஆகியோர் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். மாடசாமியின் மகன் தான் சாட்சி கருணாகரன் என்றால் சரிதான். சிவஞானத்தின் மகள் தான் 2ம் எதிரி என்றால் சரிதான். வள்ளியம்மாளின் பிள்ளைகள் தான் சந்திரா, இராஜேஸ்வரி, முனிஸ்வரன் என்றால் சரிதான். சாட்சி கருணாகரன், சந்திரா, இராஜேஸ்வரி இவர்களுக்கு 3, 4 எதிரிகள் என்ன உறவு முறையோ அதே உறவு முறை தான் சிவகுமாருக்கும், பாப்பா என்ற வெள்ளத்தாய்க்கும் என்றால் சரிதான். வள்ளியம்மாளின் சொத்து அவரது கணவர் வழியில் பாத்தியப்பட்டது என்றால் அவர் தனிப்பட்ட முறையில் கிரையம் வாங்கியது. அந்த சொத்திற்கும், 3, 4 எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறிய சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல.

(1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.)

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

C KATHIRAVAN
Digitally signed by C KATHIRAVAN
Date: 2025.04.23 11:58:23 +0530